www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

**47**

# '1970-ல் ஏற்பட்ட போராட்ட உத்வேகம்'

> ஜே.வி.பி.யினர் வேலையில்லாத சிங்களக் கிராமிய இளைஞர்களையும் அவர்கள் தங்கள் அமைப்பில் இணைத்துக் கொண்டனர். மலையக மக்கள் இந்திய அரசின் கைக்கூலிகள் என்ற கருத்து ஜே.வி.பி. தலைவர்களிடம் இருந்தது. இது அடிப்படையில் பௌத்த சிங்கள தேசியவாதத்தின் வெளிப்பாடாகவே இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசும், பௌத்த சிங்கள தேசியவாதிகளும், குடாநாட்டில் பௌத்த மதத்தைப் பரப்பி தமிழ் மக்களுடைய ஒற்றுமையைச் சீர்குலைக்க முயற்சி எடுத்துக்கொண்டிருந்த காலகட்டத்தில் தென்னிலங்கையில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட ஆரம்பித்திருந்தது. அரசாங்கத்தினுடைய நிர்வாகத் திறமையின்மை காரணமாக சகல துறைகளிலும் சீர்கேடுகள் தலைதூக்க ஆரம்பித்தன.



தோட்டத் தொழிற்துறை உட்பட அரச தொழிற் துறைகள் மற்றும் தனியார் துறைகளில் உற்பத்திக் குறைவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் தரத்தில் வீழ்ச்சியும் ஏற்பட்டது. இதனால் அந்நியச் செலாவணி வரவு குறைந்தது. இதை ஈடுசெய்வதற்கு வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இவ்வாறு பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடு விதிக்கப்படும்போது, உள்நாட்டுச் சந்தையில் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கம் கொடுப்பது வழக்கம். ஆனால், ஐக்கிய தேசியக்கட்சி அவ்வாறு எதுவுமே செய்யாது வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கி நிலைமையைச் சமாளிக்க முயன்றது.

வெளிநாடுகளிலிருந்து கடனாகப் பெறப்பட்ட பணத்தை அத்தியாவசிய உற்பத்தித்துறைகளில் முதலீடு செய்வதற்குப் பதிலாக, அரச நிர்வாகத் துறைகளுக்குச் செலவு செய்ததால் நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. பொருட்களின் விலைகளும் அதிகரிக்க ஆரம்பித்தன. அதே நேரம் மக்களுக்கு வழக்கப்பட்டு வந்த உணவு மானியம் உட்பட பல்வேறு மானியங்களும் சேவைகளும், குறைப்புக்கும் வெட்டுக்கும் உள்ளாக்கப்பட்டன.

1960-ம் ஆண்டு நவம்பர் மாதம் சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) கடன் வாங்குவதற்கு அவர்கள் விதித்த நிபந்தனையின் பேரில் ரூபாவின் மதிப்பு குறைக்கப்பட்டதுடன், மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச அரிசி மானியமும் குறைக்கப்பட்டது. இந்த இரண்டு நடவடிக்கைகளும் நாட்டில் இன்னும் விலை வாசியை அதிகரிக்கச் செய்ததுடன்; கடுமையான பொருளாதார நெருக்கடியையும் ஏற்படுத்தியது.

இதனால் நாடெங்கிலுமுள்ள பல சிறு தொழில் நிலையங்கள் மூடப்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. பெரிய தொழில் நிறுவனங்கள் ஆட்குறைப்புச் செய்யவேண்டிய கட்டாயத்துக்குள்ளாக்கப்பட்டன. போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு, உரம், கிருமிநாசினி, விதைநெல், மற்றும் மரக்கறி விதைகள் என்பவற்றின் விலைகள் அதிகரிப்பு முதலான காரணங்களால் விவசாயிகளும் பெரும் பாதிப்புக்குள்ளாயினர்.

தோட்டத் தொழிற் துறையிலும் மற்றும் அரச, தனியார் துறைகளிலும் அடிக்கடி வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெற ஆரம்பித்தன. பேராதனை, கொழும்புப் பல்கலைக் கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட ஆரம்பித்தனர்.

நாடெங்கும் (அதாவது தமிழீழப் பிரதேசத்திலும் கூட) வேலையின்மை மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு என்பவற்றால் ஏற்பட்ட தாக்கம் மக்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக இது சிங்கள இளைஞர்கள் மத்தியில் அமைதியின்மையையும் மற்றும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி முதலான ஏகாதிபத்திய நிதிநிறுவனங்களின் கைப் பொம்மையாக இருக்கின்ற அரசைத் தூக்கி எறிவதற்கு ஆயுதப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற உணர்வையும் தோற்றுவித்திருந்தது. தமிழ் இளைஞர்கள் மத்தியிலும், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதாகச் சொல்லிக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலும் மந்திரிப் பதவியிலும் சுகங்காணும், அவற்றிற்காக தமிழ் மக்களின் இறைமையையே விலைபேசி விற்கத் தயாராக இருந்த தமிழ் தலைமைகளை ஆயுதப்போராட்டம் ஒன்றினால்தான் வென்றெடுக்க முடியும் என்ற எண்ணத்தையும் தோற்றுவித்திருந்தது.

சிங்கள இளைஞர்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் அணியாக சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற மக்கள் விடுதலை முன்னணி (JVP) யினரும், தமிழ் இளைஞர்களது உணர்வுகளைப் பிரதிபலிப்பவர்களாக தமிழ் இளைஞர் பேரவையில் அதிருப்தி கொண்டு ஒரு பிரிவினரும் இருந்தனர்.

இந்த இரண்டு பிரிவினருக்கும் போராட்டத்திற்கான நம்பிக்கையை ஊட்டிய நபராகவும் அதே நேரத்தில் விமர்சனத்துக்குரிய நபராகவும் நா. சண்முகதாசன் இருந்தார்.

> சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து சென்று மக்கள் விடுதலை முன்னணி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை சிங்கள இளைஞர்கள் அமைத்தனர். அக்கால கட்டத்தில் ஜே.வி.பி யின் மத்திய குழுவில் இருந்த 14 பேரில் ஒருவர்கூட தமிழர் இல்லை

யாழ்ப்பாணத்தில் சாதிக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்ட வடிவமாக நா.சண்முகதாசனின் வழி காட்டலில் கம்யூனிஸ்ட் கட்சியினர் முன்னெடுத்த ஆயுதப் போராட்டம் பௌத்த சிங்கள தேசியவாதிகளுக்கும், சாதிய அமைப்பை கட்டிக்காக்க விரும்பிய இந்துத்துவவாதிகளுக்கும் பாராளுமன்ற நாற்காலிகளுக்காக ஓட்டப் போட்டி நடத்திக் கொண்டிருந்த தமிழ் தலைவர்களுக்கும் எட்டிக்காயாகக் கசந்தாலும், மாற்றம் வேண்டும் என்று விரும்பிய சகல தரப்பினருக்கும் அது ஒரு முன் மாதிரியாக இருந்தது.

மாற்றத்தையோ உரிமைகளையோ யாசித்துப்பெற முடியாது, போராடித்தான் பெற வேண்டும் என்ற நம்பிக்கையை அந்தப் போராட்டம் உருவாக்கியிருந்தது.



குறிப்பாக அந்தக் காலகட்டத்தில் (1960-1970) சீனாவில் மாவோவின் வழிகாட்டலில் மாணவர்கள் நடத்திய கலாச்சாரப் புரட்சி, இலத்தீன் அமெரிக்காவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கெதிராக சேகுவேரா நடத்திய போராட்டங்கள் என்பன மார்க்சிச சித்தாந்தத்தின் மீதும், அரசுக்கு ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான மார்க்சிச வழி ஆயுதப் போராட்ட வடிவத்தின் மீதும் சர்வதேச அளவில் இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் ஓர் ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தன.

இலங்கையிலும், அப்போதிருந்த சகல பல்கலைக் கழகங்களிலும் மார்க்சிசக் கோட்பாடுகளைக் கற்பது ஒரு 'பாஷனாக' இருந்தது. பேராசிரியர்கள் மாணவர்கள் என்று எல்லாத் தரப்பினரும் மார்க்சிச நூல்களை தேடிக் கற்க ஆரம்பித்தனர்.

சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்து சென்று மக்கள் விடுதலை முன்னணி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை அமைத்த சிங்கள இளைஞர்கள் (அக்கால கட்டத்தில் ஜே.வி.பி யின் மத்திய குழுவில் இருந்த 14 பேரில் ஒருவர்கூட தமிழர் இல்லை) பேராதனை தொழும்பு பல்கலைக் கழகங்கள் மற்றும் கண்டி, கொழும்பு உட்பட நாட்டின் தென்பகுதி முழுவதும் இருந்த உயர் கல்லூரிகளிலும் மார்க்சிசக் கொள்கையின்பால் ஈடுபாடுகொண்டிருந்த மாணவர்களை ஒன்றுதிரட்ட ஆரம்பித்திருந்தனர். அத்தோடு வேலையில்லாத சிங்களக் கிராமிய இளைஞர்களையும் அவர்கள் தங்கள் அமைப்பில் இணைத்துக்கொண்டனர். இலங்கையில் அணிதிரட்டப்பட்ட பாட்டாளி மக்களாக இருக்கும் மலையகத் தமிழ் மக்களை அவர்கள் தங்கள் அமைப்பில் சேர்த்துக்கொள்ளவில்லை. மலையக மக்கள் இந்திய அரசின் கைக்கூலிகள் என்ற கருத்து ஜே.வி.பி. தலைவர்களிடம் இருந்தது. (இது அடிப்படையில் பௌத்த சிங்கள தேசியவாதத்தின் வெளிப்பாடாகவே இருந்தது. இது பற்றி அடுத்த அத்தியாயத்தில் விரிவாக எழுதுகிறேன்.)

மறுபுறத்தில் ஆயுதப் போராட்டச் சிந்தனை கொண்ட தமிழிளைஞர் பேரவையில் இருந்த தமிழ் மிதவாதத்தலைமையின் மீது அதிருப்திகொண்ட பிரிவினர், JVP யினர் செய்ததுபோல் பெரிய அளவில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள தமிழ் மாணவர்களை அணிதிரட்ட முற்படவில்லை. அதுபோல் தமிழ் தலைவர்களது சத்தியாக்கிரகம் மற்றும் 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டங்களின்பால் ஈர்க்கப்பட்ட பின்னர், அவர்களின் கையாலாகாத்தனத்தால் மனமுடைந்துபோய் குமுறிக் கொண்டிருந்த இளைஞர் பிரிவையும் இவர்கள் உடனடியாக ஒரு ஆயுதப் போராட்டத்திற்கு ஒன்றிணைக்க முன்வரவில்லை.

இவர்கள் முதலில் தாங்கள் கற்றுக்கொள்ள நினைத்தார்கள். நிலைமை எப்படியிருக்கின்றது என்று கணிப்பீடு ஒன்றைச் செய்வதற்கு முயன்றார்கள். இதற்காக அதாவது மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நிலை எவ்வாறு உள்ளது? அவர்கள் மத்தியிலிருந்து போராட்டத்திற்கான அடித்தளத்தை இட முடியுமா? என்றெல்லாம் தெரிந்துகொள்வதற்காக இவர்கள் மத்தியில் இருந்து ஒரு குழு மலையகம் சென்றது.

**- நக்கீரன்**

படிப்பகம்